# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **344/2015**

ஆணை எண். **51/2016**

நாள் : **05/04/2016**

**திரு. எஸ். பேச்சிமுத்து,**
**எண். 6, ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை,**
**கே.கே.நகர் (மேற்கு)**
**நெசப்பாக்கம் – 600 078.** — **முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 10,**
**சென்னை மாநகராட்சி** — **எதிர் மனுதாரர்**

**சென்னை மாநகராட்சி, கே.கே. நகர் (மேற்கு), நெசப்பாக்கம் ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை, எண்.6ல் குடியிருக்கும் திரு. எஸ். பேச்சிமுத்து என்பவரின்** **28.12.2015** நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் **29.12.2015** அன்று பெறப்பட்டு, **344/2015** என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

சென்னை மாநகராட்சி, கே.கே. நகர் (மேற்கு) நெசப்பாக்கம், ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை, எண்.6 குடியிருப்பில் வசித்து வரும் திரு. எஸ். பேச்சிமுத்து என்பவர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்களில் பழுது பணி மேற்கொண்ட பொழுது கீழ்காணும் சாலைகள் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளன என்று தெரிவித்து சாலைகளை செப்பனிட ஆவண செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

1) ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை

2) ஜெய்பாலாஜி நகர் நீட்சி சாலை

3) ஜெய்பாலாஜி நகர் பின்இணைப்பு சாலை

4) மூக்காம்பிகை தெரு

5) டாக்டர் கானு சாலை

6) பாரதிநகர் சாலை

7) ஏரிக்கரை தெரு

2. மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக 10-வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று சாலைகளில் உள்ள பள்ளங்கள் அனைத்தும் சரி செய்யப்பட்டு விட்டன என்றும் மற்றசாலைகளுக்கான பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமையிடத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்றவுடன் பணி ஆணை வழங்கப்பட்டு சாலைகள் செப்பனிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரும் தான் அளித்துள்ள புகாரினை ஏற்று தண்ணீர் தேங்கியுள்ள இடங்கள் சரி செய்யப்பட்டு விட்டன என்று உறுதி செய்துள்ளார். எனவே, இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறை மன்ற நடுவர் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ெ. பழனிவேல்

உதவி பதிவாளர்.

பெறுநர்

**திரு எஸ். பேச்சிமுத்து,**
**எண். 6, ஜெய்பாலாஜி நகர் பிரதான சாலை,**
**கே.கே.நகர் (மேற்கு)**
**நெசப்பாக்கம் – 600 078.**

நகல்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 10,**
**சென்னை மாநகராட்சி.**